# கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப்பெருவிழா

# திருவழிபாடு ஆண்டு - C

# 2025-06-22

(*இன்றைய வாசகங்கள்:*

*தொடக்க நூலிலிருந்து வாசகம் 14: 18-20,*

*திருப்பாடல்கள் 110: 1. 2. 3. 4 (பல்லவி: 4*a),

*புனித பவுல் 1கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்திலிருந்து வாசகம்*11:23-26,

*லூக்கா எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 9: 11*b-17)

*திருப்பலி முன்னுரை*

*ஆண்டவருக்குரியவர்களே, கிறிஸ்துவின் திருஉடல் திருஇரத்தம் பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் உள்ளன்புடன் வரவேற்கிறோம். ஈசாக்கின் பலியும், பாஸ்கா செம்மறியும் நம் ஆண்டவர் இயேசுவின் சிலுவை பலியை முன்குறிப்பவையாக இருந்தன. கிறிஸ்துவின் சிலுவை பலியை எக்காலத்துக்கும் நிலைநிறுத்தும் அடையாளமாக, அவர் நமக்கு நற்கருணையை ஏற்படுத்தி தந்துள்ளார். ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் பகிர்ந்து ஆயிரக்கணக்கானோரின் பசியாற்றிய இயேசு, நற்கருணை வழியாக தம்மையே நமக்கு உணவாக தருகிறார். கோதுமை அப்பத்திலும், திராட்சை இரசத்திலும் மறைந்திருக்கும் கிறிஸ்துவின் உடனிருப்பை முழுமையாக நம்பி, அவரைப் போன்று மற்றவர்களின் நலனுக்காக நம்மையே பகிர வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*எங்கும் இருப்பவராம் இறைவா,*

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும், நற்கருணையில் கிறிஸ்துவின் மறைபொருளான உடனிருப்பை உணர்ந்து வாழவும், இறைமக்களை நற்கருணை விசுவாசத்தில் வளர்க்கவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*ஒற்றுமையை அருள்பவராம் இறைவா,*

*உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும், நற்கருணைப் பலியின் மேன்மையையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து, கத்தோலிக்க திருச்சபையில் ஒன்றிணையும் தூண்டுதல் பெற உதவிபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*தியாகத்தின் உருவாம் இறைவா,*

*எம் நாட்டு தலைவர்கள் தியாக உணர்வோடு செயல்பட்டு, உண்மை மற்றும் நீதியின் பாதையில் மக்களை வழிநடத்தவும், சமூகத்தில் அன்பையும் ஒற்றுமையையும் வளர்க்கவும் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*ஆறுதல் அளிப்பவராம் இறைவா,*

*உலகில் பல்வேறு அச்சுறுத்தல்களாலும், துன்புறுத்தல்களாலும் வாழ்வின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகி நிற்கும் மக்களுக்கு, தேவையான ஆறுதலும் உதவியும் கிடைக்குமாறு அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*மூவொரு இறைவா!*

*உம் மூவருக்குள்ள ஆள்வகையில் தனித்தன்மை, இறை இயல்பில் ஒருமை, மாண்பில் சமத்துவம் போன்ற உச்சங்களைப் போற்றுகின்றோம். நாங்களும் எங்களது தனித்தன்மையைப் பாராட்டி, நேயமுடன் உம்மை, எம்மை. உலகை அறிந்து கொள்ள அருள் புரிய இறைவா உம்மை வேண்டுகிறோம்.*

*வாழ்வின் துணையாம் இறைவா,*

*நோய், துன்பம், அழுகை போன்றவற்றையே வாழ்க்கையாக கொண்டிருக்கும் மக்கள், மன அமைதியையும், மகிழ்ச்சியையும் சுவைக்கும் வகையில் புதிய வாழ்வைக் காண துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*வானக அரசரே இறைவா,*

*உமது உண்மையின் அரசைப் புறக்கணித்து, உலகைச் சார்ந்த தங்கள் சொந்த விருப்பங்களில் நாட்களை செலவிடும் எம் நாட்டு மக்கள் அனைவரும், நிலை வாழ்வைப் பற்றிய உண்மைகளை விரும்பித் தேட துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*